ISSN 2806 - 5158


# கருப்பு வெள்ளை

Karuppu Vellai

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு : 01 | 2021 ஆகஸ்ட் - 20 | வெள்ளை : 07

# கற்பிட்டி பிரதேசத்தில் இடம்பெறும் சகல வித சட்டவிரோத செயற்பாடுகளும் நிறுத்தப்படும்



## கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திடசங்கற்பம்

(எமது விஷேட செய்தியாளர்) (விரிவான செய்திகள் 03 ம் பக்கத்தில்)

## கற்பிட்டியில் 90 சதவீதமான பொதுமக்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது

### கற்பிட்டியில் இரண்டாவது தடுப்பூசி 20 ம் திகதி ஏற்றப்படும்

(எமது அலுவலக செய்தியாளர்) (செய்தி 03 ம் பக்கத்தில்)

## கற்பிட்டி கிளித்தீவில் 370 கிலோ உலர் மஞ்சளுடன் ஒருவர் கைது

(எமது விஷேட செய்தியாளர்) (செய்தி 03 ம் பக்கத்தில்)

## கற்பிட்டி பிரதேச சபைக்கு மீண்டும் உறுப்பினராக ஆப்தீன் அலாவுதீன்

(நமது செய்தியாளர்) (செய்தி 02 ம் பக்கத்தில்)

## கற்பிட்டி பிரதேச சபையின் மு.கா சுழற்சிமுறை தேசிய பட்டியல் முசல்பிட்டி அஸ்லமுக்கு வழங்கப்பட்டது



(எம்.எச்.எம்.எஸ்)

**கற்பிட்டி** பிரதேச சபையில் முஸ்லிம் காங்கிரஸின் சுழற்சி முறையிலான தேசிய பட்டியல் உறுப்பினர் ஜெஸீம் றஹ்மான் 2021.06.31 ம் திகதி இராஜினாமா செய்ததினை அடுத்து வெற்றிடமான இந்த உறுப்பினர் வெற்றிடத்துக்கே முசல்பிட்டியைச் சேர்ந்த **அபுத்தாஹீர் மொஹமட் அஸ்லம்** நியமிக்கப்பட்டுள் ளதாகவும் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெள்ளிக்கிழமை வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சுழற்சி முறை யிலான தேசிய பட்டியலின் மூன்றாவது உறுப்பினராவார்.



# கற்பிட்டியில் அதிகரிக்கும் போதைப் பாவனை

ஒரு கொலை விழுந்தால் இன்று அது பேசு பொருளாகியுள்ளது. ஆனால் இந்த போதையினால் கொலையை விடவும் கொடிய சம்பவங்கள் அன்றாடம் நம் ஊரில் அறங்கேறி வருவது இங்கு நம் எத்தனை பேருக்கு தெியும்.

இந்த போதையினால் சிலர் பித்துபிடித்துள்ளனர். பலருக்கு ஆண்மை பிரச்சினை...பல பெண்கள் கணவன் மார்களோடு குடும்பம் நடத்த முடியாமல் பெற்றோர் வீட்டிலும் உறவினர்கள் வீட்டிலும் தஞ்சம் புகுந்துள்ள நிலை....

தமது தாம்பத்திய வாழ்வு பாதிக்கப்பட்ட நிலையிலும், தன் மனைவியை பலவந்தமாக இன்னொரவனுக்கு விற்றேனும் தன் போதைத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள துணிந்து விட்ட நாசமாய்ப்போன கணவன்மார்கள்....

தனக்குப் பிறந்த பிள்ளைகளைக் கூட விட்டு வைக்காமல் துஷ்பிரயோகம் செய்ய எத்தனிக்கும் அளவுக்கு புத்தி பேதலித்து போன தம் கணவன்மார்களிடம் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள துடியாய் துடிக்கும் தாய்மார்கள்...

போதைக்கு அடிமையான கணவன் குடம்பத்தைக் கைவிட்டு சீரழிக்கின்றான். அவன் மனைவி தனது பிள்ளைகளுக்கு உணவளிக்க வழியின்றி தட்டுத் தடுமாறும் நிலை அறிந்து அவளுக்கு உதவி செய்வது போல தனது. இச்சையைத் தீர்த்துக் கொள்ள முற்படும் ஒரு சில காமுகர் கூட்டம்...

அப்பாவி மனைவியையும் போதைக்கு அடிமையாக்கி , அவனும் சீரழிந்து அவளையும் நாசமாக்கி நடுத் தெருவிற்கு வந்து விட்ட சில குடும்பங்கள்.

இந்த பாலாய்ப் போன போதைப் பாவனையினால் விவாகரத்து நாடி காதி நீதிமன்றங்கள் வரும் வழக்குகள்அதிகம்...

ஊரில் நாலா புறமும் பெருகியுள்ள களவுகள் ..

போதை விற்பனை வியாபாரிகளாக திடீரென முளைத்துள்ள பெரும் கோடீஸ்வரர்கள். ..

அந்த கோடீஸ்வரர்களுக்கு அடிமைச் சேவை செய்ய பல கௌரவமான மனிதர்கள்...

இப்படி இன்னும் பட்டியல் நீண்டு செல்கின்றது.

மேலும் இன்றைய மாணவர்களும் இப் போதை பாவனைக்கு அடிமையாகி வருகின்றதும் மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதற்கு பொறுப்பு கூறுவது பாடசாலை சூழலா... ? அல்லது வீட்டுச் சூழலா...?

இதற்கெல்லாம் யார் காரணம்...?

**அரசியல் தலைமைகளா...?**

**ஊர் தலைமைகளா...?**

**ஊர் நலன் விரும்பும் அமைப்புக்களா..?**

**அல்லது ஒட்டு மொத்த ஊருமா...?**

**எம். எஸ் - கற்பிட்டி**

# கற்பிட்டி பிரதேச சபைக்கு மீண்டும் உறுப்பினராக ஆப்தீன் அலாவுதீன்

**கற்பிட்டி** பிரதேச சபைக்கு மீண்டும் தெரிவு செய்யப் பட்ட ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஆப்தீன் அலாவுதீன் கடந்த 2021.08.12 ம் திகதி கற்பிட்டி பிரதேச சபையின் 40 வது கூட்டத் தொடரில் கலந்து கொண்டார்.

2018 ம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் சொற்ப வாக்குகளால் கற்பிட்டி பிரதேச சபையில் தோல்வி அடைந்தாலும் தனது ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கற்பிட்டி பிரதேசத்தில் மேற்கொண்டதாகவும் தனக்கும் கட்சிக்கும் இடையில் உள்ள விசுவாசத்தின் மூலம் மூன்று வருடங்களின் பின் மீண்டும் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் பதவியை தனக்கு கட்சி வழங்கியுள்ளது எனவும் இதற்காக முதற்கண் இறைவனுக்கும் அடுத்து ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் பாலித்த ரங்க பண்டார மற்றும் கட்சியின் புத்தளம் தொகுதி அமைப்பாளர் ஜேசுதாசன் மோஸஸ் ஆகியோருக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் தனது முதல் சபை அமர்வின் தனது உரையை தமிழ் ஆரம்பித்து உரையாற்றியதுடன் தனது உரையின் முக்கிய கருப்பொருளாக பிரதேச சபை உறுப்பினர்கள், தலைவர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை பண்புகள், கடமைகள் பற்றிய தெளிவினை பிரதேச சபைகளின் உறுப்பினர் சட்டக்கோவை எண் 87.∴15 அடிப்படையில் வழங்கியதுடன் கற்பிட்டி பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 2021.05.19 ம் திகதியுடன் 90 வருடங்கள் நிறைவடைந்துள்ளதனையும் சுட்டிக்காட்டினார்.







முதலாம் பக்க தொடர்

# கற்பிட்டி பிரதேசத்தில்..

கற்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சகல விதமான சட்டவிரோத செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதற்கான சகல சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாகவும் அதனை மீறி சட்டவிரோத செயற்பாடுகளை மேற்கொள்ளும் குற்றவாளிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு என்றும் பின் நிற்கப்போவதில்லை என கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.பி.எஸ் நிசாந்த குமார "கருப்புவெள்ளை " மின்னிதழ் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

இச்செயற்பாடுகளின் ஒரு கட்டமாக கற்பிட்டி பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களின் வாகனங்களை கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பை அடுத்து பெகோ இயந்திரங்கள் இரண்டு, டிப்பர் வாகனங்கள் நான்கு, டெக்டர்கள் ஆறு, லொரி ஒன்று என்பன கைப்பற்றப் பற்றதுடன் இவ்வாகனங்கள் அணைத்தும் கற்பிட்டி நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் கற்பிட்டி பொலிஸாரினால் கடந்த 16 ம் திகதி ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது.









# கற்பிட்டி கிளித்தீவில் 370 கிலோ உலர் மஞ்சளுடன் ஒருவர் கைது







கற்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளித்தீவு பகுதியில் 370 கிலோ உலர்ந்த மஞ்சளுடன் ஒருவர் கற்பிட்டி கடற்படையினரால் கடந்த 17ம் திகதி கைது செய்யப்பட்டார்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் ***SLNS*** விஜய கடற்படையினர் கிளித்தீவு பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் வள்ளம் மூலம் வேறொரு. இடத்துக்கு கடத்தப்படவிருந்த இடத்துக்கு கடத்தப்படவிருந்த 10 உரைப் பைகளில் பொதி செய்யப்பட்ட 370 கிலோ உலர்ந்த மஞ்சலும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் அவரிடம் பறிமுதல் செய்யப்பட்ட வள்ளம், கைப்பற்றப்பட்ட 370 கிலோ உலர்ந்த மஞசல் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சின்னப்பாடு சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கபட உள்ளதாக கற்பிட்டி கடற்படையினர் தெரிவித்தனர்.

# கற்பிட்டியில் 90 சதவீதமான பொதுமக்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது

## கற்பிட்டியில் இரண்டாவது தடுப்பூசி 20 ம் திகதி ஏற்றப்படும்

**கற்பிட்டி** பிரதேச செயலக பிரிவின் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட சகல கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கான கொவிட் 19. இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் வேலைத்தி ட்டம் ஆகஸ்ட் 20 ம் திகதி நடைபெறும் என கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அறிவித்துள்ளது

இதன்படி இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்ம் கற்பிட்டி வைத்தியசாலை, கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை, கண்டக் குளி முஸ்லிம் மகா வித்தியாலயம், முசல்பிட்டி முஸலிம் வித்தியாலயம், பாலக்குடா சிங்கள பாடசாலை, நுரைச்சோலை தேசிய பாடசாலை, நரக்களி பாடசாலை, தழுவை சிங்கள பாடசாலை, உலுக்காப்பள்ளம் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் 20ம் திகதி தடுப்பூசி ஏற்றப்படும். கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட சகல கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கான முதலாவது தடுப்பூசி 90 சதவீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளது.

Facebook முகநூல்

# முகநூல் வாயிலாக "கருப்புவெள்ளை" மின்னிதழ் பத்திரிகையையும் அதன் ஆசிரியரையும் வாழ்த்தும் நெஞ்சங்கள்...!!!

Ashraf Sajaa
130 mutual friends
Abdul Raheem Je
272 mutual friends
Nafra Mts
2 mutual friends
Muhuseen Raisuc
120 mutual friends
Noufer Mohamed
320 mutual friends
Illılı Rīfāš Rīfāš Il
209 mutual friends
Sifan DX
317 mutual friends
Mhd Kaiyoom
273 mutual friends
Mohamed Asfan
455 mutual friends
Ramzani Comm
322 mutual friends
Mohamed Rinushar
325 mutual friends
Mohamed Ahdeer
562 mutual friends
Shifan Muhamed
57 mutual friends
Faiz Mohamed
296 mutual friends
Prasanna Mohamed
425 mutual friends
Mohamed Ahdeer
562 mutual friends

All 10 9 1

Mohamed Siyaj
Faris Ahamed
286 mutual friends
Niksan Watsan
346 mutual friends
Illılı Rīfāš Rīfāš Ill...
209 mutual friends
Mohamed Firshad
307 mutual friends
Nafra Mts
2 mutual friends

All 49 44

Md Faleem
254 mutual friends
Meeyan Kaha
360 mutual friends
Azrin Abdul
221 mutual friends
Jinnah Jinnah
350 mutual friends
Mohamed Thariq
264 mutual friends
Mohamed Nawfar
374 mutual friends
Abdul Rauf Munas
371 mutual friends
Muhuseen Raisud
120 mutual friends
Shafa Sarjoon
386 mutual friends
Asfaq Mohamed
359 mutual friends
Inaamul Hassan
118 mutual friends
Nagoor Ibrahim M
150 mutual friends
Mohamed Sihanu.
182 mutual friends
Nazardeen Nazard
245 mutual friends
Rilwan Rahman
328 mutual friends
Rifly Azahr
309 mutual friends
Yazar Muhammad
274 mutual friends
Imthath Imthath
446 mutual friends
Faiz Mohamed
296 mutual friends
Ramzani Comm
322 mutual friends

Siddeeq Fasmi Mo...
289 mutual friends
Mohamad Rifath
94 mutual friends
Muhamed Nafras
398 mutual friends
Risad Mohamed
419 mutual friends
Mohamed Ikmal
261 mutual friends
Mohamed Rikas
305 mutual friends
Noufer Mohamed
320 mutual friends
Mohamed Musad...
38 mutual friends
Illılı Rīfāš Rīfāš Ill.
209 mutual friends
Mohamed Rasan
182 mutual friends
Mohamed Sirhan
210 mutual friends
Shifan Muhamed
57 mutual friends
Segualawdeen Sa...
227 mutual friends
Abdul Raheem Je...
272 mutual friends
Mohamed Aboosa..
39 mutual friends
Mohamed Rilmiyas
202 mutual friends
Ajeebkhan Ahame...
6 mutual friends
Faris Ahamed
286 mutual friends
Jawad Marrikar
109 mutual friends
Mohamed Risath...
141 mutual friends
Niksan Watsan
346 mutual friends
Niron Jpj
175 mutual friends

All 21 20 1

Ramzani Comm
322 mutual friends
Ashraf Sajaa
130 mutual friends
Niksan Watsan
346 mutual friends
Niyas Deen
193 mutual friends
Mohamed Rafi Sh...
304 mutual friends
Abdul Kahhar Ali J...
131 mutual friends
Asharaf Alikhan S...
111 mutual friends
Siddeeq Fasmi Mo...
289 mutual friends
Mhd Kaiyoom
273 mutual friends
Shafa Sarjoon
386 mutual friends
Muhuseen Raisud...
120 mutual friends
Zainul Mohamed
383 mutual friends
Nafra Mts
2 mutual friends
Farwin Fathima
59 mutual friends
Abdul Raheem Je...
272 mutual friends
Mohamed Rikas
305 mutual friends
Faiz Mohamed
296 mutual friends
Najeem Nilam
387 mutual friends
Shifan Muhamed
57 mutual friends
Jawad Marrikar
109 mutual friends
Noufer Mohamed
320 mutual friends

All 7 6 1

Noufer Mohamed
320 mutual friends
Jinnah Jinnah
350 mutual friends
Najeem Nilam
387 mutual friends
Abdul Raheem Je...
272 mutual friends
Faiz Mohamed
296 mutual friends
Musammil Abdul...
344 mutual friends

5

Meeyan Kaha
360 mutual friends
Abdul Raheem Je...
272 mutual friends
Yoosuf Musawvir...
567 mutual friends
Faiz Mohamed
296 mutual friends
Mhd Kaiyoom
273 mutual friends
Mohamed Akram
Request sent
Mohamed Sifli
12 mutual friends
Mohamed Fainas
142 mutual friends
Mhd Kaiyoom
273 mutual friends
Nafra Mts
2 mutual friends
Riyas Ahamed
408 mutual friends
Sifas Nazar
329 mutual friends
Ashraf Sajaa
130 mutual friends
Noufer Mohamed
320 mutual friends



# முகநூல் வாயிலாக "கருப்புவெள்ளை" மின்னிதழ் பத்திரிகையையும் அதன் ஆசிரியரையும் வாழ்த்தும் நெஞ்சங்கள்...!!!


Facebook முகநூல்

**Mohamed Aboosalifu**
சியாஜ் அவர்களே,
உங்கள் முயற்சிக்கு
எனது அன்பான
வாழ்த்துக்கள்.
6w Like Reply

**AbooHanifa Mohamed Fawzil**
Best effort, congratulation
6w Like Reply

**Mohamed Musadhiq**
Congratulations
6w Like Reply

**Mohamed Thariq**
அல்ஹம்துலில்லாஹ்
உங்களின்
தைரியத்தையும்
உண்மையையும்
எப்போதும்
யாருக்காகவும் விட்டு
விடாதீர்கள் உங்களில்
உண்மைக்கு என்றும்
நான் உதவி செய்வேன்

**Faris Ahamed**

2 d Like Reply

**Farhan Kakkayankulam**
Mashaa Allah vaaltht
1w Like Reply

**Farhan Kakkayankulam**


1w Like Reply

**Faris Ahamed**
Vaaltukal
1w Like Reply

**Nazardeen Nazardeen**



**Faris Ahamed**
Masha Allah
வாழ்த்துக்கள்.
6w Like Reply

**Ajeebkhan Ahamed Haiderali**
அல்ஹம்திலில்லாஹ்
உண்மையை
உறுதியுடன் உரக்க
உறைக்கச் சொல்
நண்பா.. அல்லாஹ்
அக்பர்
6w Like Reply

**Mohamed Rilmiyas**
Best. Congrage
6w Like Reply

**Shifan Muhamed**
Very good work
5w Like Reply

**Niksan Watsan**
இவ்வாறான ஒரு
முயற்சிக்கு எமது ஊர்
நலன் விரும்பிகள்
அவருக்கு பூரண
ஒத்துழைப்பு வழங்க
வேண்டும்... Mohamed
Siyajவாழ்த்துக்கள்😍👍
5w Like Reply

**Musammil Abdul Razzak**
Congratulations
4w Like Reply

**Mohamed Rilmiyas**
1w Like Reply

**Alraj Nawfal**
Congratulations
1w Like Reply

**Mohi Rock**


1w Like Reply

**Ajeebkhan Ahamed Haiderali**
வாழ்த்துக்கள்
அல்ஹம்திலில்லாஹ்
1w Like Reply

**Mhd Kaiyoom**
Congratulations
1w Like Reply

**Anver Sadar Mohamed**
வாழ்த்துக்கள்
1w Like Reply

**Mohamed Rafi Shamy**

**Abdul Raheem Jesfar**
வாழ்த்துக்கள்
அல்ஹம்திலில்லாஹ்
1w Like Reply

**Muhamed Nafras**
Congratulations
1w Like Reply

**Mohamed Sihanuk Riyas Mohamed**
Congratulations
1w Like Reply

**Shafa Sarjoon**
Masha allah
1w Like Reply

**Ďj Kiyas**
1w Like Reply

**Rifqan Rahmani**
சத்தியத்தினூடாக
அசத்தியத்தை ஒழிக்கும்
மகுடமாக உங்கள்
பத்திரிகைப் பயணம்
தொடரட்டும்.
வாழ்த்துக்கள்.
1w Like Reply 1

**Rilfas Mohamed**
Congratulations machan
1w Like Reply

Facebook முகநூல்

**Riwanaskhan Khan**
1w Like Reply

**Nafra Mts**

1w Like Reply

**Ilfar Moh**
Cngrts Brother
1w Like Reply

**Prasanna Mohamed**


1w Like Reply

**Riskhan Aboosalibu**
Congratulations
1w Like Reply

**Mohamed Riyan**
Masha allah
1w Like Reply

**Sifan DX**


# கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் அன்றைய வளர்ச்சியும் இன்றைய மந்த நிலையும்



**2018 ம்** ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கற்பிட்டி பிரதேச. இளைஞர் சம்மேளனத்தின் தலைமையில் நடைபெற்ற சிறப்பான பாராட்டப்பட வேண்டிய காலப்பகுதியில் மறைத்திருக்கும் சில நிகழ்வுகளை மீட்டிப்பார்க்கும் தருணம்.

2018ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் நிர்வாகத் தெரிவில் 27. இளைஞர் கழகங்களில் ஒவ்வொரு கழகங்களில் இருந்தும் 06 முக்கிய நிர்வாகிகளின் பங்குபற்றுதலுடன் நிர்வாகத் தொரிவு நடைபெற்றது இத் தெரிவில் தலைவர் பதவிக்காக 03 கழகங்களின் தலைவர்களின் பெயர்கள் பங்குபற்றிய உறுப்பினர்கள் மூலம் முன்மொழியப்பட்டிருந்தது. அதன்படி

01. HNC இளைஞர் கழகம் - எம்.ஏ.எம்.அஸ்பாக்
02. அல் ஹுதா இளைஞர் கழகம் - எம். ஆதீப்
03. Excellent இளைஞர் கழகம் - எஸ்.விராஜ்

ஆகிய மூன்று அனுபமிக்க இளைஞர் கழகங்களின் தலைவர்கள் தலைவர் பதவிக்காக முன்மொழியப்பட்டிருந்தார்கள் அதன்படி தலைவர் பதவிக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது. 08 வருடங்களுக்கு மேலாக இளைஞர் கழகங்கள் பற்றிய அனுபவத்தையும், இளைஞர் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் 2012 ம் ஆண்டு கற்பிட்டி மண்ணுக்கு பெற்றுக்கொடுக்க பெரிதும் முயற்சிகளை மேற்கொண்ட HNC. இளைஞர் கழகத்தின் தலைவர் அஸ்பாக் வாக்கெடுப்பில் ஒரு மேலதிக வாக்கினை பெற்று தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட அஸ்பாக் கற்பிட்டி பிரதேச சம்மேளனத்தில் இருந்து மாவட்ட சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினராகவும் அதே வருடம் தெரிவு செய்யப்பட்டார்.

சம்மேளனத்தின் மூலமாக நடத்தப்பட்ட 2018 ம் ஆண்டுக்கான பிரதேச அளவிளான விளையாட்டுப் போட்டி, கலை, கலாச்சார தொடர்பான அனைத்து போட்டிகளிலும் எமது பிரதேச இளைஞர் கழகங்களை பங்குபற்ற வைத்து திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு 2018 ம் ஆண்டின் சம்மேளனத்தின் நிர்வாகம் மிகவும் சிறப்பாக அனைத்து நிகழ்ச்சிக. ளையும் முன்னெடுத்திருந்தது.

2018ம் ஆண்டு இளைஞர் சம்மேளனத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற Youth With talent நிகழ்ச்சித் திட்டதினுடாக பாலர் பாடசாலை மற்றும் வீதி நிர்மானங்கள் என பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க சம்மேளனம் மிகவும் சிறப்பாக செயற்பட்டது. தேசிய அரசினால் நடத்தப்பட்ட Youth With Talent நிகழ்ச்சித் திட்டத்தின் தேசிய ரீதியிலான சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்த சம்மேளனமாக கற்பிட்டி பிரதேச சம்மேளனம் மூன்றாம் இடத்தை தன்வசப் படுத்திக்கொண்டது.

மேலும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, வங்கி பயிற்சி நெறிகள், குறைந்த கட்டணத்தில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத்தல் என தனது சம்மேளனத்தின் பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்திருந்தார்கள்.

2019ம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவில் தலைவர் அஸ்பாக் தனது பொறுப்பை புதிய நிர்வாகத்திற்கு எவ்வித போட்டிகளுமின்றி முழுமையாக எவ்வித பொறுப்புக்களையும் தான் பெற்றுக்கொள்ளாமல் தனது சேவைகளை தொடர்வேன் என்ற வாசகத்துடன் சம்மேளனத்தில் இருந்து விடைபெற்றார்.

**2019 ம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் சேவைகள் பற்றிய விபரங்களை........**

**அடுத்து வரும் இதழ்களில் எதிர்பாருங்கள்........**

**எம்.எச்.எம்–கற்பிட்டி**

# கடைபிடிக்க வேண்டிய பால்நிலை சமத்துவமும் சிறந்த சமூக உருவாக்கமும்

**இந்த** உலகமும் மனிதனும் அவனது எண்ணங்களும் மிகவும் அழகான முறையில் படைக்கப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல பலம் வாய்ந்தவர்கள், பலகீனமானவர்களை அடக்கி ஆள ஆரம்பித்ததன் விளைவுதான் இன்று நாம் எதிர் நோக்கி கொண்டிருக்கும் வன்முறைக்கும் உலகின் சுழற்சியில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கும் காரணம். குறிப்பாக சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றோம், கலாச்சாரத்தையும் விழுமியங்களையும் பாதுகாக்கின்றோம் எனக் கூறி குறிப்பிட்ட ஒரு சிலர் செய்து வரும் குழப்பத்தில் அதிகமா. னவர்கள் பெண்களை குறிவைத்து தங்களது எண்ணங்களையும் செயற்பாடுகளையும் நகர்த்தி செல்வது தான் வேதனை !



பெண்கள் எந்த உடை அணிய வேண்டும். இவை இவைதான் மேற்கத்தைய கலாச்சாரம்? பெண்கள் காலுக்கு மேல் கால் போட்டு உட்காருவது அநாகரீகம் ! லொட்டு லொசுக்கு என்று ஒவ்வொரு ஆணுக்கும் பெண்கள் சார்ந்து ஒவ்வொரு கற்பனையை வைத்துக்கொண்டு தாங்கள் எதை கலாச்சாரமாக பார்க்கின்றார்களோ, நினைக்கின்றார்களோ அந்த கோட்பாட்டுக்குள் அடங்காத ஏனைய பெண்கள் எல்லோரையும் தாங்கள் விரும்பும் பெயரை வைத்து விமர்சிப்பார்கள். சில அசிங்கம் பிடித்த ஆணாதிக்க சிந்தனை கொண்டவர்கள்



குறிப்பாக அபாயா அணியும் முஸ்லிம் பெண்கள் மாத்திரம் தான் இலங்கை முஸ்லிம்களின் கலாச்சாரத்தை கட்டிக் காக்கும் தூண்கள், வேறு உடை அணியும் பெண்கள் அணைவரும் இவர்களைப் போன்றோர் கண்களுக்கு ஒழுக்க மற்றவர்கள், தங்களுடன் சஹஜமாக ஒருபெண் சிரித்து கதைத்து விட்டால் வேசியாகத்தான் இருக்க வேண்டும் என்பது சில ஒழுக்க சிந்தனையற்ற ஆண்களின் கணிப்பு ஒழுக்கம் என்பது ஒருவருடைய சிந்தனையையும் நடத்தையையும் வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

குர்ஆனுடைய அத்தியாயம் - 24 அந்நூர் (பிரகாசம்) வசனம் :30

“ (நபியே) விசுவாசம் கொண்ட ஆண்களுக்கு கூறுவீராக : அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும் : தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக் காத்துக் கொள்ளவும் : அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்: நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கு உணர்பவன்”

எனக் கூறுகின்றது அதே அத்தியாத்தில் வசனம் 31 ல் பெண்களுக்கு அதே விடயத்தை கொஞ்சம் விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

இஸ்லாம் ஒழுக்கத்தை ஆண் மற்றும் பெண் இரு பாலாருக்கும் சமமாக கற்பித்துளளது.

ஆனால் இந்த சமூகம் கட்டமைத்துள்ள ஒழுக்கம் பெண்களை மட்டும் வைத்துதான் !

கலாசாரத்தை காவுவதற்கும் மதங்களை மேம்படுத்துவதற்காகவும் எல்லா மதங்களிலும் பெண்களை மட்டுமே பலியாக்கி வருகின்றார்கள் சமூக வழிநடத்துனர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள்.

எனவே ஒரு ஒழுக்கமான சமூகம் உருவாக வேண்டும் என்றால் பால்நிலை சமத்துவத்தை அறிந்து அதை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

**பிஸ்லியா பூட்டோ**

எழுத்தாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர்.






# புத்தளத்தில் பெண்களின் சுயதொழில் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பு

(புத்தளம் செய்தியாளர்)

புத்தளம் பகுதியில் சுயதொழில் மேற்கொள்ளும் பெண் பயனாளிகளின் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக சுயதொழில் பெண் உற்பத்தியாளர்களால் உருவாக்கப்பட்ட " **புத்தளம் மாவட்ட பெண்களின் சுயதொழில் மற்றும் நல்லிணக்க ஒன்றியம்**" வாயிலாக பெண்களின் சுயதொழில் கைப்பனிப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பவற்றின் கண்காட்சி மற்றும் விற்பனைகளை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். இவ்வாறு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த விரும்புவர்கள் அதன் **ஒழுங்கமைப்பாளரான பிஸ்லியா பூட்டோ** வை தொடர்பு கொள்ளவும்

**தொலைபேசி இல - 071 5386251**

# புத்தளம் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுடன் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடல்

(குறிஞ்சிப்பிட்டி செய்தியாளர்)

**ஶ்ரீ லங்கா** முஸ்லிம் காங்கிரஸின் பத்தளம் மாவட்ட அமைப்பாளரும் புத்தளம் நகர சபைத் தலைவருமான மர்ஹு' ம் கே.ஏ பாயிஸ் அவர்களின் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது ? அந்த தலைமையை யாருக்கு வழங்குவது ? என்பது பற்றிய விஷேட கலந்துரையாடல் ஒன்று புத்தளத்தில் ஜவுபர் மரைக்காரின் ஏற்பாட்டில் புத்தளம் நகர சபைத் தலைவர் ரபீக் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச சபைக்கு மு. கா வேட்பாளர்களாக போட்டியிட்ட கற்பிட்டி உறுப்பினர்களான யு. ஜே. எம். அன்வர் சதார், எம். றபீக் மற்றும் குறிஞ்சிப்பிட்டியைச் சேர்ந்த ஏ.ஆர். ஜெஸ்பர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலை பற்றியும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்சியின் செயற்பாடுகள் மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், பிரதேச அமைப்பாளர்கள் ஆகியோரின் நியமணங்கள் தொடர்பாகவும் மறைந்த மர்ஹு' ம் பாயிஸ் இன் நினைவாக கட்சியின் பேராளர் மாநாட்டை புத்தளத்தில் நடத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது





# கற்பிட்டியில் சமூர்த்தி 'சிப்தொர' உதவிப்பணம்

(எமது அலுவலக செய்தியாளர்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள சமூர்த்தி பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் கடந்த 2019 ம் ஆண்டு கல்விப் பொது தராதர (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்து கல்விப் பொது தராதர உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான " **சிப்தொர**" புலமைப்பரிசில் உதவிப் பணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் கற்பிட்டி பிரதேச செயலாளர் டி. பீ தனன் சூரிய தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள சமூர்த்தி பெறும் குடும்பங்களில் உயர்தரத்தில் கல்வி கற்கும் 65 மாணவர்களுக்கு மாதாந்தம் 1500/- வீதம் பத்து மாதங்களுக்கான " சிப்தொர" புலமைப்பரிசில் உதவிப் பணம் 15000/- வீதம் வழங்கப்பட்டமை குறிப்பிடதக்கது.




உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

0774748407

இவ் கருப்புவெள்ளை மின்னிதழ் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம்.சியாஜ் என்பவரால் 2021.08.20 ல் வெளியீடப்பட்டது.